# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# C.C. No.714/2022   P.W.6

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | உண்ணாமலை | க–பெ | வலத்தப்பன் |
| ஊர்: | : | கன்டவராயன்பட்டி | சமயம்: | |
| வயது: | : | 51/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.06.2025**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் கன்டவராயன்பட்டியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். 21.05.2017 அன்று மாலை 4.45 மணிக்கு காரைக்குடியில் இருந்து எங்களுக்கு சொந்தமான டவேரா வாகனத்தில் நானும், எனது மகள் சத்தியா, எனது கொழுந்தன் மனைவி அன்னபூரணி அவர்களது மகள், மகன் வள்ளிக்கன்னு, முத்துமாணிக்கம் வள்ளிக்கன்னுவின் தோழி கீர்த்திகா, எங்கள் வீட்டில் அருகில் குடியிருந்த அகிலான்டேஸ்வரி அவர்களது பேத்தி ரேனுகா ஆகியோர் காரைக்குடியில் இருந்து கிளம்பி கன்டவராயன் பட்டியில் திருவிழாவிற்காக சென்றோம். இந்த வாகனத்தை எனது மகன் சுப்பிரமணியன் ஓட்டினார்.

5.00 மணியளவில் மானகிரி சிக்னல் தான்டியதும் சம்பவ சாலையில் எதிர்புரமாக எர்ட்டிகா கார் ஒன்று கொஞ்சம் ஒலட்டி ஒலட்டி வந்து இடது புரமாக நாங்கள் திரும்பும் போது மேற்படி வாகனம் எங்கள் வாகனத்தின் மீது மோதியது. அந்த கார் மோதியதும் எனக்கு தலையில் அடிபட்டு இடது முழங்கை எலும்பு முறிந்துவிட்டது. எனது மகள் சத்தியா என்பவருக்கு இடது புருவத்தின் மேல் பகுதியில் காயம் ஏற்பட்டது. அவருக்கு முதுகு தன்டுவடத்தில் எலும்பு சிதைந்து விட்டது. வள்ளிக்கன்னு என்பவருக்கு இடது மார்பு எலும்பு உடைந்து விட்டது. அகிலான்டேஸ்வரிக்கு கை, கால்களில் அடிபட்டது. ரேனுகா என்ற குழந்தை நிகழ்விடத்திலேயே இறந்து விட்டதாக சொன்னார்கள். கிருத்திகா என்பவருக்கு லேசானா காயம் ஏற்பட்டது. மேலும் இந்த விபத்தில் அன்னபூரனி, முத்துமாணிக்கம் ஆகியோர் நிகழ்விடத்திலேயே இறந்து விட்டார்கள். எனது மகனுக்கு புருவம் மற்றும் உதடு ஆகிய பகுதிகளில் காயம் ஏற்ப்பட்டது.

ஆம்புலன்சில் காயம் பட்ட எங்களை சிகிச்சைக்காக அப்போலோ மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு நாங்கள் சிகிச்சையில் இருந்தோம். போலீசார் அங்கு விசாரணை செய்யவில்லை. சம்பவயிடத்தில் வைத்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நாங்கள் பயணம் செய்த வாகனம் ஒட்டியவர் சரியாக தான் ஓட்டினார். எங்களுக்கு எதிரில் வந்த வாகனம் வேகமாகவும், ஒலட்டி ஒலட்டி வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதியது. நாங்கள் சென்ற வாகனம் மேற்படி சாலையில் இடது புறமாக தான் சென்றது. நாங்கள் சென்ற வாகனம் நிதானமாக தான் சென்றது. எதிரில் ஒலட்டி வந்த வாகனம் வருவதை பார்த்து எங்கள் வாகனம் ரோட்டின் இடது புறமாக ரோட்டை விட்டு இறங்கி நின்றது. அப்போது தான் எதிரிரே வந்த வாகனம் எங்கள் வாகனத்தின் மீது மோதியது. எதிரில் வந்த வாகனம் ரோட்டின் வலது புறத்தில் இருந்து இடது புறம் நோக்கி வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதியது. எதிரில் வந்த வாகனம் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்து மோதியது. சம்பவம் நடந்த இடம் சிக்கனல் என்றால் சரிதான். சம்பவயிடத்திலேயே போலீசார் வந்து யார் மீது தவறு என்று கேட்டு அதை எழுதிக்கொண்டார்கள். என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.06.04 10:11:46 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி